# பரீட்சகரின் அறிக்கை

## AA3 பரீட்சை – 2017 சனவரி

## (AA31) நிதிக் கணக்கீடும் அறிக்கையிடலும்

---

பரீட்சார்த்திகளால் விடப்பட்டிருந்த அதிகளவான பொதுவான தவறுகள் அடையாளம் காணப்பட்டன. வெற்றியடையாத மாணவர்கள், எதிர்காலப் பரீட்சைகளில் வெற்றியடையும் பொருட்டு அவர்களால் விடப்படும் தவறுகளைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் :

### பகுதி A

### வினா இல. 01

(a) இங்கு சொத்தினைப் பொருள் வரையறை செய்யுமாறு கேட்கப்பட்டிருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் வரைவிலக்கணம் உட்பட சகல கூறுகளையும் குறிப்பிட்டதன் மூலம் சொத்தினைச் சரியான முறையில் பொருள் வரையறை செய்ததனால் இப்பகுதிக்கான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அதே நேரம், அவர்களில் சிலர் வரைவிலக்கணம் உட்பட சில கூறுகளை தவிர்த்திருந்ததால் அரைவாசிப் புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

(b) இங்கு, கோட்பாட்டு வேலைச்சட்டகத்தினுள் உள்ளடக்கப்படும் 3 பிரதான பகுதிகள் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது.

அதிகளவான பரீட்சார்த்திகள், வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாத காரணத்தால் வினாவின் இப்பகுதிக்கு குறைந்தளவிலேயே விடையளித்திருந்தனர்.

உதாரணம் : அதிகளவான பரீட்சார்த்திகள், பிரதான பகுதிகளைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக ‘‘நிதிக் கூற்றுகளின் பிரதான கூறுகளை’’ (வருமானக் கூற்று / நிதிநிலைக்கூற்று / காசுப் பாய்வு) குறிப்பிட்டிருந்தனர்.

**மேம்படுத்தப்பட வேண்டிய பாடப் பரப்பு :** கோட்பாட்டு வேலைச்சட்டகம் மீதான அறிவு.

### வினா இல. 02

(a) வியாபாரத் தீர்மானங்களை மேற்கொள்வதில் உரிமமொன்றிற்கான காசுப் பாய்வுக் கூற்றின் மூன்று நன்மைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது.

இப்பகுதிக்கு ஓரளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை வழங்கியிருந்த அதே வேளை, குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் காசுப் பாய்வுக் கூற்றின் பிரதான கூறுகளை உப பிரிவுகளாகப் பிரித்து வழங்கியிருந்த விடைகள் பின்வருமாறு :

- இயக்கக் காசுப் பாய்வுகளை விளங்கிக்கொள்வதற்கு.
- முதலீட்டுக் காசுப் பாய்வுகளை விளங்கிக்கொள்வதற்கு.
- நிதிக் காசுப் பாய்வுகளை விளங்கிக்கொள்வதற்கு.

(b) இங்கு, LKAS 07 காசுப் பாய்வுக் கூற்று நியமத்தின்படி காசு மற்றும் காசுச் சமானங்களாகக் கருதப்படும் இரண்டு உருப்படிகளைக் கூறுமாறு கேட்கப்பட்டிருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்த அதே வேளை, ஒரு சில பரீட்சார்த்திகள் மட்டுமே இதற்கான விடைகளாக மாற்றத்தகு கருவிகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**மேம்படுத்தப்பட வேண்டிய பாடப்பரப்பு:** கணக்கீட்டு நியமங்கள் பற்றிய அறிவு.

## வினா இல. 03

இவ்வினா அருவச் சொத்துக்களை அடையாளம் காண்பது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. தரப்பட்டிருந்த சொத்துக்களை அருவச் சொத்துக்களாக அடையாளங்காண முடியுமா என்பது பற்றி பரீட்சார்த்திகளிடம் கேட்கப்பட்டிருந்தது.

பரீட்சிக்கப்பட்ட பாடப் பரப்பு தொடர்பில் பரீட்சார்த்திகளிடம் போதிய அறிவு காணப்படாததன் காரணத்தால் இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக அமையவில்லை. பரீட்சார்த்திகள், எந்தவொரு தொழினுட்ப வினாவையும் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு கணக்கீட்டு நியமங்களைப் போதியளவு கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**மேம்படுத்தப்பட வேண்டிய பாடப்பரப்பு:** கணக்கீடு மீதான தொழினுட்ப அறிவும் பிரயோகமும்

## வினா இல. 04

இங்கு WAC முறையின் கீழ் 2016 யூன் 30 ஆந் திகதியில் மூலப்பொருட் தொக்கின் கிரயத்தை கணிக்குமாறு கோரப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் மூலப்பொருட் தொக்கின் கிரயத்தைச் சரியாகக் கணித்து இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், ஒரு கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள், வினாவில் கேட்கப்பட்டதைச் சரியாக வாசிக்காமல் மூலப்பொருட் தொக்கின் கிரயத்தைக் கணிப்பதற்கு FIFO முறையினைப் பிரயோகித்திருந்தனர்.

**மேம்படுத்தப்பட வேண்டிய பாடப்பரப்பு :** விடையின் முன்வைப்பு

## பகுதி B

## வினா இல. 05

இங்கு நேரில் முறையைப் பயன்படுத்தி 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழிற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான நிகரக் காசுப் பாய்வைத் தயாரிக்குமாறு கேட்கப் பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குத் திருப்திகரமான புள்ளிகளைப் பெற்றிருந்த அதே வேளை குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

பரீட்சார்த்திகளால் விடப்பட்டிருந்த சில பிழைகள் கீழே தரப்படுகின்றன :

- அதிகளவான பரீட்சார்த்திகள் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிகர காசுப் பாய்வினைத் தயாரிப்பதற்குப் பதிலாக முழுமையான காசுப் பாய்வுக் கூற்றினைப் பூர்த்திசெய்வதற்கு முயற்சி எடுத்திருந்தனர்.
- அதிகளவான பரீட்சார்த்திகளால் வரிக்கு முன்னரான இலாபத்தைச் சரியாகப் பெற முடியவில்லை.
- பரீட்சார்த்திகள் கணிப்பீட்டின் ஊடாக சரியான எண் பெறுமானங்களைப் பெற்றிருந்த போதிலும் (உதா: செலுத்தப்பட்ட வரி, செலுத்தப்பட்ட வட்டி) அவர்கள் அதனைச் சரியாகச் செம்மையாக்கம் செய்யவில்லை.

**மேம்படுத்தப்பட வேண்டிய பாடப்பரப்பு :** வினாவை விளங்கிக்கொள்ளுதல் மற்றும் விடையை முன்வைத்தல்.

## வினா இல. 06

இங்கு தரப்பட்ட தகவல்களைக் கொண்டு விகிதங்கள் சிலவற்றைக் கணிப்பிடுமாறு கோரப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளால் மொத்த இலாப வீதம், விரைவுச் சொத்து விகிதம், நடைமுறை விகிதம் ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிட்டு இவற்றுக்கு ஒதுக்கப்பட்டிருந்த முழுப் புள்ளிகளையும் பெறுவதற்கு முடிந்திருந்தது.

எவ்வாறாயினும், தொக்கு இருப்புக் காலம், EPS, ROCE ஆகியவற்றைப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை.

பரீட்சார்த்திகளால் விடப்பட்டிருந்த சில பொதுவான பிழைகள் பின்வருமாறு :

- விகிதங்களைக் கணிப்பிடும்போது சில பரீட்சார்த்திகள் தொகுதி எண்ணையும் பகுதி எண்ணையும் இடம்மாற்றி எழுதியிருந்தனர்.
- வினாவில் 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விகிதங்களே பரீட்சிக்கப் பட்டிருந்த போதிலும் பரீட்சார்த்திகள் 2015 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக அவற்றைக் கணிப்பதற்கு முயற்சித்திருந்ததுடன் மேலதிக முயற்சியையும் நேரத்தையும் செலவிட்டிருந்தனர்.

**மேம்படுத்தப்பட வேண்டிய பாடப்பரப்பு:** விகிதங்கள் பற்றிய விளக்கம்

## வினா இல. 07

இவ்வினாவின் பகுதி (a) இல், தரப்பட்ட குத்தகை ஊடுசெயல்கள் தொடர்பில் நிதிநிலைக் கூற்றின் பிரித்தெடுப்புகளைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை என்பதைக் காணக்கூடியதாக இருந்தது. மேலும், இவ்வினாவுக்கு விடையளித்திருந்தவர்களும்கூட திருப்திகரமான அளவு புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை. இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகையானது ஏனைய வினாக்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

பரீட்சார்த்திகளால் விடப்பட்டிருந்த சில பொதுவான பிழைகள் கீழே தரப்படுகின்றன :

- குத்தகை வட்டியின் பிழையான கணிப்பீடு
- ஆரம்பத்தில் செய்யப்பட்ட வைப்புக்கான பிழையான வழிமுறை
- குத்தகைச் சொத்துக்கள் தொடர்பான தேய்மானத்தொகையின் பிழையான கணிப்பீடு
- குத்தகைக் கடன்கொடுத்தோரின் நடைமுறை மற்றும் நடைமுறை சாரா பகுதிகளின் பிழையான பிரித்தெடுப்புகள்
- நிதிக் கூற்றுக்களின் தவறான முன்வைப்பு

இவ்வினாவின் பகுதி (b) இல், LKAS 08 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் எனும் நியமத்திற்கு அமைய, கணக்கீட்டு வழிமுறைகளை விபரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளிக்கவில்லை. விடையளித்திருந்தவர்கள்கூட சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமத்தின் மீது போதிய அறிவின்மை காரணமாக திருப்திகரமான அளவு புள்ளிகளைப் பெற்றிருக்க வில்லை.

**மேம்படுத்தப்பட வேண்டிய பாடப்பரப்பு :** சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் மற்றும் நியாயமான அளவு முன்வைக்கும் அறிவு.

## பகுதி C

### வினா இல. 08

கம்பனி ஒன்றின் வருமானக் கூற்று, நிதிநிலைக்கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் மாற்றங்களைக் காட்டும் கூற்று ஆகியவை உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.

பரீட்சார்த்திகளால் விடப்பட்ட சில பிழைகள் கீழே தரப்படுகின்றன :

**ஆதனம், பொறி மற்றும் உபகரணம் :**

- குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் தேய்மானத்தைக் கணிப்பிடுவதில் குறைந்த அறிவினை வெளிக்காட்டியிருந்தனர்.
- பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான ஆரம்ப மீதிச் செம்மையாக்கத்தை செய்திருக்கவில்லை.
- குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளால் மோட்டார் வாகன விற்பனை நட்டத்தை அடையாளம் காண முடியவில்லை.

**முற்கொடுப்பனவுகள் :**

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் 2016.03.31 இல் உள்ளவாறான முற்கொடுப்பனவுத் தொகையைத் துல்லியமாக கணிப்பிட்டிருந்தனர் ஆயினும், அதனை வருமானக் கூற்று மற்றும் நிதிநிலைக்கூற்று ஆகியவற்றில் துல்லியமாக முன்வைக்கவில்லை.

**கடன்பெறுகைக் கிரயம் :**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் LKAS 23 தொடர்பில் போதிய அறிவைக் கொண்டிராத காரணத்தால் கடன்பெறுகைக் கிரயச் செம்மையாக்கத்தைச் செய்திருக்கவில்லை.

**வரிப் பொறுப்புகள் :**

சொற்ப எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே 2016.03.31 இல் உள்ளவாறு செலுத்தப்படவேண்டிய வரியினைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

**முன்மொழியப்பட்ட பங்கிலாபம் :**

அதிகளவான பரீட்சார்த்திகள் வெளிப்படுத்தல்களின் கீழ் முன்மொழியப்பட்ட பங்கிலாபத்தைச் சரியாக வெளிப்படுத்தியிருக்கவில்லை. அவர்கள் அதனை உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்றில் செம்மையாக்கம் செய்திருந்தனர்.

**பொவாக :**

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் விடைத்தாளுடன் அவர்களுக்கு உதவியளிக்கும் கணிப்பீடு களை இணைத்திருக்கவில்லை. இதன் காரணமாக விடைகளைப் பெறுவதற்குப் பின்பற்றிய படிமுறைகளை கண்டுபிடிக்க முடியவில்லை.

**ஒட்டுமொத்த செயலாற்றுகை :**

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்ததுடன் இவ்வினாவுக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் நியாயமானளவு புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

## வினா இல. 09

இவ்வினாவின் பகுதி (a), ஒன்றித்தலால் ஏற்படும் நன்மதிப்பைக் கணிப்பிடுவதையும் ஒன்றித்த நிதிநிலைக்கூற்றைத் தயாரிப்பதையும் பரீட்சித்திருந்தது.

இவ்வினாவுக்கு விடையளித்த அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு நியாயமானளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

பரீட்சார்த்திகளால் விடப்பட்டிருந்த சில பொதுவான தவறுகள் பின்வருமாறு :

- நன்மதிப்பைக் கணிப்பிடும்போது NCI இன் சீர்மதிப்பு சரியாக வழிப்படுத்தப்படவில்லை.
- பொது ஒதுக்கம் மற்றும் கைக்கொள் இலாபத்திற்கான பிழையான பிரயோகம்
- சில பரீட்சார்த்திகள் ஒன்றித்த நிதிநிலைக் கூற்றைத் தயாரிக்கும்போது எவ்வித செம்மையாக்கங்களையும் செய்யாது இரு கம்பனிகளினதும் எண்பெறுமானங்களை வெறுமனே கூட்டியிருந்தனர். இதற்கிணங்க ஒதுக்கப்பட்ட புள்ளிகளை இழந்திருந்தனர். உதா : PPE, தொக்குகள், வியாபார வருமதிகள், வியாபார சென்மதிகள் போன்றவை.
- அடிப்படையான ஒன்றித்தல் கோட்பாடுகள் மீதான போதிய அறிவின்மை. நன்மதிப்பின் NCI கணிப்பீட்டிற்கான வழிமுறை, கம்பனிகளுக்கிடையிலான ஊடுசெயல்களை அகற்றுதல் போன்றவை.

**மேம்படுத்தப்பட வேண்டிய பாடப்பரப்பு :**

ஒன்றித்தலின் அடிப்படை மற்றும் கம்பனிகளுக்கிடையேயான ஊடுசெயல், தேறாத இலாபம், NCI போன்ற அடிப்படைச் செம்மையாக்கங்கள்.

இவ்வினாவின் பகுதி (b) ஆனது, குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தாளாண்மைகள் தொடர்பாக கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை அதன் புலனாய்வு அதிகாரத்தினைப் பிரயோகிக்கும்போது அது எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் இரண்டினை விபரிப்பதைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு விடையளிக்கவில்லை என்பதால் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளை இழந்திருந்தனர்.

விடையளித்திருந்தவர்கள்கூட சம்பந்தமற்ற விடைகளையே வழங்கியிருந்தனர்.

- - -

## பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்திசெய்வதற்குக் கவனஞ்செலுத்த வேண்டிய பொதுவான விடயங்கள்

1. முழுமையான பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் முழுவதையும் நன்றாகப் படித்து ஒவ்வொரு அலகு அல்லது பரப்புகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் அறிவு மட்டத்தை முழுமையாகப் விளங்கிக்கொள்வதை விருத்திசெய்து கொள்ளவும்.

2. பரீட்சார்த்திகள் வினாவைப் பல தடவைகள் கவனமாக வாசிப்பதுடன் கணிப்பீடுகளுடன் தொடர்புபட்ட சகல செய்முறைகளையும் தெளிவாகக் காட்டுதலும் வேண்டும்.

3. வினாவுக்கு விடையளிக்கும்போது அதனுடன் ஏதாவது எடுகோள்கள் சம்பந்தப்படுமாயின் அத்தகைய எடுகோள்களை தெளிவாகக் குறிப்பிடவும்.

4. கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டிருத்தலும் வேண்டும். விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர் வினா இலக்கங்களை மீளவும் பரீட்சிப்பது கட்டாயமானதாகும்.

5. வினாப்பத்திரத்தில் தரப்படும் அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றவும்.

6. கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் அதற்குப் பிரேரிக்கப்பட்டிருந்த விடைகளைச் செய்து பார்ப்பது அறிவு, திறன்கள் மற்றும் அனுபவத்தை கூர்மைப்படுத்துவதற்கு உதவி புரியும். உண்மையான பரீட்சைப் பத்திரங்களில் அதுபோன்ற மாதிரிகள் மற்றும் கட்டமைப்புகள் மீளவும் கேட்கப்படலாம் என்பதால் இது எப்பொழுதும் அனுகூலமாகவே இருக்கும்.

7. இப்பாடத்துடன் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்கள், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகை களையும் பாடப் பரப்புகளுடன் சம்பந்தப்பட்ட ஏனைய வாசிப்புப் பொருள்களையும் வாசிக்கவும்.

8. நேர முகாமைத்துவம் என்பது பரீட்சையின்போது முக்கியமானதொன்றாகும். ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளைப் பார்ப்பதன் மூலம் பரீட்சார்த்திகள் விடையளிக்கும்போது செலவிடப்பட வேண்டிய நேரத்தை மதிப்பீடு செய்துகொள்ள முடியும்.

9. தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் உறுதியான தெளிவுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -